தேவர் திருமகனார் நினைவிடத்தில் முதல்வர் அஞ்சலி!

முதல் பக்கத் தொடர்ச்சி

பாம்பன் பாலத்தைக் கட்டிய நீலகண்டன் அவர்கள்தான் இதையும் கட்டியிருக்கிறார்.

மதுரையில் தேவர் திருவுருவச் சிலை!

குடியரசுத் தலைவரைக் கொண்டு திறந்தவர் கலைஞர்!

அதேபோல், பி.கே.மூக்கையாத் தேவர் அவர்களின் முயற்சியால் அமைக்கப்பட்டு, மதுரையில் கம்பீரமாக நிற்கும் தேவர் சிலை திறப்பு விழாவுக்கு அன்றைக்கு குடியரசுத் தலைவராக இருந்த வி.வி.கிரி அவர்களை அழைத்துக் கொண்டு வந்து, அந்த விழாவிற்குத் தலைமை வகித்தவரும் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

பசும்பொன் திருமகனாரின் நினைவைப் போற்றக்கூடிய, புகழைச் சொல்லக்கூடிய வகையில், தலைவர் கலைஞர் அவர்கள் செய்த முன்னெடுப்புகளைத் தலைப்புச் செய்திகளாக சிலவற்றை மட்டும் நான் இங்கு பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

- மதுரை ஆண்டாள்புரம் பாலத்திற்கு முத்துராமலிங்கத் தேவர் பாலம் என்று பெயர் சூட்டினார்.
- காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் தேவர் பெயரால் 25 இலட்சம் மதிப்பிலான அறக்கட்டளை உருவாக்கினார்.
- 2007ஆம் ஆண்டு பசும்பொன் திருமகனார் நூற்றாண்டு விழாவை, மாபெரும் அரசு விழாவாகக் கொண்டாடினார்.
- பசும்பொன் திருமகனார் நினைவகத்தில் அணையாவிளக்கு அமைத்தது,
- தேவர் இல்லத்தை 10 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பித்தது,
- 9 இலட்சம் ரூபாய் மதிப்பில் நூற்றாண்டு விழா வளைவு அமைத்தது,
- 9 இலட்சம் ரூபாய் மதிப்பில் புகைப்படக் கண்காட்சி,
- 4 இலட்சம் ரூபாய் மதிப்பில் நூலகம்,
- 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடி இறக்கும் இடம்,
- 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் பால்குட மண்டபம்,
- 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் முளைப்பாரி மண்டபம்
- நினைவகத்தைச் சுற்றியிருக்கின்ற சாலையை கல் சாலையாக்கியது தலைவர் கலைஞர் அவர்கள். இப்படி நிறையச் செய்து பெருமைப் படுத்தியிருக்கிறார்.
- அதுமட்டுமல்ல, பசும்பொன் திருமகனாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, பசும்பொன் கிராமத்திற்கு மட்டும், மொத்தமாக 2 கோடியே 5 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் பல்வேறு பணிகளைச் செய்து கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு.
- 1989ல் மிகவும் பிற்படுத்தப் பட்டோர் என்று புது இடஒதுக்கீடு உரிமையை உருவாக்கி, கல்வி - வேலைவாய்ப்பில் இந்தச் சமூக மக்கள் முன்னேற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவரும் தலைவர் கலைஞர்தான்!
- கழக ஆட்சி முதன்முதலாக உருவானபோது, பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த பிரமுகர்கள், தங்களுடைய மக்களுக்கான கல்வி மேம்பாட்டிற்காக கல்லூரிகளைத் தொடங்கத் திட்டமிட்டார்கள். அவை அனைத்திற்கும் அனுமதி வழங்கியவர் தலைவர் கலைஞர்!

மேலநீலித நல்லூரில் - 'பசும்பொன் தேவர் கல்லூரி' நிறுவியவர் கலைஞர்!

அதிலும் குறிப்பாக, முக்குலத்தோர் சமூகம், தாங்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் கல்லூரிகளை அமைக்கத் திட்டமிட்டார்கள். முன்னாள் பேரவைத் தலைவர் செல்லப்பாண்டியன் அவர்கள் தலைமையில் 'தேவர் கல்விச் சங்கம்' உருவாக்கப்பட்டது. அதன் சார்பில், மேலநீலிதநல்லூரில், அமைந்த பசும்பொன் தேவர் கல்லூரிக்கு அனுமதி வழங்கியதோடு, 44.94 ஏக்கர் நிலத்தையும் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்.

> **பசும்பொன் திருமகனாரின் புகழைப் பற்றிச் சொல்லவேண்டும் என்றால், பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருமையோடு எடுத்துச் சொன்னதை நான் இங்கே நினைவு கூர விரும்புகிறேன். "அன்றைய அறம் வளர்த்த பாண்டிய மன்னர்களின் ஒரு மித்த இளவல் மாதிரி, கம்பீரமாகக் காட்சி அளித்தார் தேவர் திருமகன்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள், பசும்பொன் திருமகனாரை மனதாரப் பாராட்டி இருக்கிறார்!**

அப்படிப்பட்ட அந்தக் கல்வி நிறுவனம், என்ன நோக்கத்திற்காக தொடங்கப்பட்டதோ, அதைச் சீர்குலைக்கின்ற வகையில் சில தனி நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு பல பிரச்சினைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சில ஆண்டு களுக்கு முன்பு அந்த வட்டாரத்து மக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்திக் கொண்டு வந்தார்கள்.

அப்போது, "ஆட்சி அமைந்ததும் தீர்வு காண்போம்" என்று நான் சொன்னேன். 2021ல் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்ததும், அதை மீட்டிருக்கின்றோம். இப்போது, அரசு மேற்பார்வையில் அந்தக் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

தெய்வீகத் திருமகனார் அரங்கை கடந்த ஆண்டு நான் திறந்து வைத்தேன்!

இன்னும் சிறப்பாக நடத்த நிர்வாக ரீதியாக எல்லா உதவிகளையும் நமது திராவிட மாடல் அரசு நிச்சயமாகச் செய்யும் என்று அந்த நல்ல செய்தியையும் நான் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தேவர் ஜெயந்தி விழாவின் போது, கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் வகையில், வெயில் மற்றும் மழையிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கவும், பசும்பொன் திருமகனார் நினைவிடத்தில், 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள "தெய்வீகத் திருமகனார் உ.முத்துராம லிங்கத் தேவர் அரங்கத்தை" கடந்த ஆண்டு நான்தான் திறந்து வைத்தேன்.

புதிதாக பசும்பொன்னில் ஒரு திருமண மண்டபம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறது. அந்த கோரிக்கையை உடனடியாக ஏற்று 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேவர் திருமகனார் பெயரில் திருமண மண்டபம் அமைக்கப்படும் என்று இந்த நேரத்தில் நான் உறுதி அளிக்கிறேன்!

முத்தமிழறிஞர் கலைஞர் போற்றிய பசும்பொன்னார்!

பசும்பொன் திருமகனாரைப் பற்றி தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிடும்போது, "வீரராகப் பிறந்தார், வீரராக வாழ்ந்தார், வீரராக மறைந்தார், மறைவுக்குப் பிறகும் வீரராகப் போற்றப்படுகிறார்" என்று சொல்வார். அத்தகைய பசும்பொன்னாரைப் போற்றுவோம்! வணங்குவோம்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து முதல்வர் அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:-

கேள்வி : கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட தேவர் கல்லூரியில் நிருவாகக் குழு அமைப்பது குறித்து

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் : நடவடிக்கையில் இருக்கிறது. விரைவில் அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவோம்.

கேள்வி : தேவர் திருமகனாருக்கு 'பாரத ரத்னா' விருது வழங்குவது குறித்து அ.தி.மு.க. வலியுறுத்தியுள்ளது தொடர்பாக...

முதலமைச்சர்: அதை நாங்கள் வழிமொழியக் காத்துக்கொண்டிருக்கிறோம்.

கேள்வி : காவேரி - வைகை குண்டாறு இணைப்புத் திட்டம் குறித்து...

முதலமைச்சர்: முயற்சியில் ஈடுபடுவோம் என்று சொல்லியிருக்கிறோம். இப்போதும் சொல்கிறேன்; முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம்.

கேள்வி : தொலைக்காட்சி செய்தியாளர்களுக்கு பென்சன் வழங்குவது தொடர்பாக

முதலமைச்சர் :- இது உங்களுக்கு மட்டும் அல்ல. தமிழ்நாடு முழுவதும் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். பரிசீலனையில் இருக்கிறது.

இவ்வாறு முதல்வர் அவர்கள் பேட்டியளித்தார்.

கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் தங்களை மேற்கு மண்டல கழகப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் கோவை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கழக மாணவர் அணி செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ் காந்தி, மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கோயம்பேடு மேம்பால

சாலைப் பழுதுகள் உடனடியாக சீர் செய்யப்பட்டது!

ஆங்கில நாளிதழ் செய்திக்கு நெடுஞ்சாலைத்துறை அறிக்கை!

சென்னை, நவ.1- சென்னை கோயம்பேடு மேம்பாலத்தின் சாலை பகுதி பழுதடைந்துள்ளதாக ஆங்கில நாளிதழ் மற்றும் தொலைக்காட்சியில் செய்தி வெளியிடப்பட்டது. மழையினால் ஏற்பட்ட பாதிப்பை உடனடியாக சீரமைத்தல் தொடர்பாக நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் தலைமைப் பொறியாளர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு வருமாறு:

சென்னை, கோயம்பேடு மேம்பாலம் உள் வட்ட சாலையில் கி.மீ. 7/4 - 7/10 (SH2)இல் அமைந்துள்ளது. இந்த உயர்மட்ட பாலம் போக்குவரத்திற்கு பாதுகாப்பாக உள்ளது. தினந்தோறும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் இந்த சாலையை பயன்டுத்துகின்றன. இந்த சாலையின் மேம்பாலத்தில் Wearing Coat Concreteஇல் அமைக்கப்பட்டுள்ளது.

29.10.2025 நாளிட்ட ஆங்கில நாளிதழ் மற்றும் தொலைக்காட்சி ஒன்றில் சென்னை கோயம்பேடு மேம்பாலம் பழுதடைந்துள்ளதாகவும், போக்குவரத்திற்கு பாதுகாப்பாக இல்லை என்றும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. பாலத்தின் மேற்பகுதியில் உள்ள Concrete Wearing Coat சில இடங்களில் தேய்மானத்தின் காரணமாக சிறிய பழுதுகள் ஏற்பட்டுள்ளது. அந்த பழுதுகளை தலைமைப் பொறியாளர் (நெ), க(ம)ப அவர்கள் ஆய்வு செய்து பழுதுகளை உடனடியாக சீர் செய்ய உத்தரவிட்டதின் பேரில் பழுதுகள் உடனடியாக சரி செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் தமது செய்திக்குறிப்பில் கூறியுள்ளார்.

மாநிலங்களுக்கு இடையிலான

எல்லை தயார் நிலை - பீகார் தேர்தலில் கடுமையான கண்காணிப்பு குறித்து அறிவுறுத்தல்!

இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

புதுடெல்லி, நவ.1 இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) மாநிலங்களுக்கு இடையிலான எல்லை தயார் நிலை குறித்து மதிப்பாய்வு செய்தது; அமைதியான மற்றும் தூண்டுதல் இல்லாத பீகார் சட்டமன்றத் தேர்தல் 2025 ஐ உறுதிசெய்ய கடுமையான கண்காணிப்பை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளது.

அது பற்றிய விவரம் வருமாறு:-

இந்தியத் தேர்தல் ஆணையமானது (ECI) இன்று பீகார் மாநிலத்தின் மாநிலங்களுக்கு இடையிலான எல்லை தொடர்பான பிரச்சினைகள் குறித்த ஒருங்கிணைப்பு கூட்டத்தை பீகார், ஜார்கண்ட், உத்தரப்பிரதேசம் மற்றும் மேற்குவங்க மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள், காவல் துறை தலைமை இயக்கநர் (DGPs), முதன்மைச் செயலாளர்கள் மற்றும் உள்துறை அமைச்சகம், இரயில்வே அமைச்சகம் மற்றும் பல்வேறு அமலாக்க அமைப்புகளின் அதிகாரிகளுடன் நடத்தியது.

தலைமைத் தேர்தல் ஆணையர் (CEC) ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையர்களான டாக்டர். சுக்பீர் சிங் சந்து மற்றும் டாக்டர். விவேக் ஜோஷி ஆகியோருடன் இணைந்து, மனிதர்கள், பொருட்கள் மற்றும் பணத்தின் நகர்வை, குறிப்பாக ஆயுதங்கள், சமூக விரோதிகள், மதுபானம், போதைப்பொருள் மற்றும் இலவசப் பொருட்கள் ஆகியவற்றின் நடமாட்டத்தை கண்காணிப்பதற்காக பீகார் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலையை மதிப்பாய்வு செய்தனர். ஆணையம் நடவடிக்கைகளை பரிசீலித்தது. மேலும் பீகாரின் எல்லை மாவட்டங்களில் அமைதி மற்றும் ஒழுங்கை பேணுவதற்காக எல்லைகளை மூடுவது குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

இக்கூட்டத்தின் போது தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், சுதந்திரமான, நியாயமான, அமைதியான மற்றும் தூண்டுதல் இல்லாத தேர்தல்களை உறுதி செய்வதில் ஆணையத்தின் உறுதியை வலியுறுத்தினார். தேர்தல் நடைமுறையின் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்த அனைத்து பங்குதாரர்களும் ஒருமித்துப் பணியாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வாக்காளர் வசதிக்கான வழிகாட்டுதல்களை பின்பற்றுவது இணங்குவது குறித்து ஆணையம் மதிப்பாய்வு செய்து, வாக்களிக்கும் நாளில் வாக்காளர்களுக்கு சுமூகமான மற்றும் இனிமையான அனுபவம் கிடைக்க உறுதிசெய்வதை ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. தலைமைச் செயலாளர்கள், காவல் துறை தலைமை இயக்குநர்கள் மற்றும் மத்திய முகமைகளின் தலைவர்களுக்கு, அமைதியான மற்றும் தூண்டுதல் இல்லாத 2025 பீகார் சட்டமன்ற பொது தேர்தலை உறுதி செய்ய அறிவுறுத்தியது.

ஜார்கண்ட், உத்தரப்பிரதேசம் மற்றும் மேற்குவங்கத்தின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் காவல் துறை தலைவர்கள், சசஸ்த்ர சீமா பாலின் (SSB) காவல் துறைத் தலைவர் ஆகியோர் பீகாரை ஒட்டிய எல்லைப் பகுதிகளில் தீவிரமான கண்காணிப்பை மேற்கொண்டு, மாநிலங்களுக்கு இடையிலான சோதனைச் சாவடிகளில் கூடுதல் சோதனைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

மத்திய அமைப்புகள், அதாவது போதைப்பொருள் கட்டுப்பாட்டு (NCB), வருமான வரித்துறை, மத்திய சரக்கு மற்றும் சேவை வரித்துறை (CGST) மற்றும் வருவாய் நுண்ணறிவு இயக்குநகம் (DRI) ஆகியவை தேர்தல் காலம் வரை கண்காணிப்பை தீவிரப்படுத்தி, செயற்பாட்டு நுண்ணறிவின் அடிப்படையில் அதிகபட்ச பறிமுதல்களை அறிவுறுத்துமாறு உத்தரவிடப்பட்டன.

இவ்வாறு இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர்

டிரம்புக்கு பதிலளிக்க மோடிக்கு துணிவு இல்லை!

காங்கிரஸ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, நவ. 1 - இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்தியதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தொடர்ந்து கூறி வரும் நிலையில், அதற்கு பதிலளிக்க பிரதமர் மோடிக்கு துணிவு இல்லை என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி விமர்சனம் செய்துள்ளார்.

இது தொடர்பாக, ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதள பக்கத்தில், அமெரிக்க அதிபர் டிரம்ப், நாடு நாடாகச் சென்று,

பிரதமர் மோடியை அவமதித்து வருவதாகவும், தற்போது, தென்கொரியா நாட்டில் அவமதித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலை நிறுத்துவ தற்காக, வர்த்தக ஒப்பந் தத்தைப் பயன்படுத்தி பிரதமர் மோடியை பயமுறுத்தியதாக டிரம்ப் மீண்டும் மீண்டும் கூறுவதையும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

ஏழு விமானங்களை சுட்டு வீழ்த்தியதாகவும் டிரம்ப் கூறியதாக ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

டிரம்பின் கருத்துக்கு பதிலளிக்க பிரதமர் மோடிக்கு துணிவு இல்லையா என வினவியுள்ள ராகுல் காந்தி,

இந்த விவகாரத்தில், பயப்பட வேண்டாம் மோடி அவர்களே என்றும், தைரியமாக பதிலளிக்க வேண்டும் என்றும் ராகுல் காந்தி கூறியுள்ளார்.

ஒசூர் சட்டமன்ற தொகுதி ஒசூர் மாநகராட்சி காமராஜ் காலனி விளையாட்டு மைதானத்தை கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ் ஆய்வு செய்தார் அப்போது காலை, மாலை நேர நடைபயிற்சி மேற்கொள்பவர்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லாமல் அவதிப்பட்டு வருவதை அறிந்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து உடற்பயிற்சி உபகரணங்கள், கூடைப்பந்து மைதானத்திற்கு தரைதளம் உள்ளிட்டவை சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து செய்து தரப்படும் என்று உறுதியளித்தார். உடன் துணை மேயர் ஆனந்தய்யா, வார்டு செயலாளர் குமார், உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இன்று நடைபெறுகிறது

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, நவ. 1- இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க, அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (01.11.2025 - சனிக் கிழமை) மாலை 4.00 மணி அளவில் மாவட்ட அவைத் தலைவர் A.K.சுந்தரமூர்த்தி தலைமையில் மாவட்ட தி.மு.க அலுவலகம் (பாரதி நகர், சிப்காட்டில்) நடைபெறுகிறது.

எனவே இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: நவம்பர் 3, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நமது மாவட்டம் வருகை குறித்து

வாக்காளர் சிறப்பு சுருக்க திருத்தம் (S.I.R) பணிகள் குறித்து

கழக ஆக்கப் பணிகள் குறித்து.

மேற்கண்டவாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்பதற்காக மாவட்ட கழகச் செயலாளர், கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் கழக நிர்வாகிகள் திரண்டிருந்தனர்.